தி.மு.க.வுக்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றி!

ஒன்றிய அரசின் வக்ப் சட்டத்திருத்தம் - உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை!

"வக்ப் வாரியத்தில் இஸ்லாமியர்கள் அல்லாதோரை நியமிக்கக் கூடாது!"

புதுடெல்லி, ஏப்.19–

புதிய திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் வக்ப் சொத்துக்களை மாவட்ட ஆட்சியர்கள் வகை மாற்றம் செய்ய இடைக்கால தடை விதித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வக்ப் வாரியத்தில் இஸ்லாமியர்கள் அல்லாதோரை நியமிக்கக் கூடாது என்றும் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. இந்த ஆணை தி.மு.க.விற்கு கிடைத்த இன்னுமொரு வெற்றி என்று கருதப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, வக்ப் திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து ஒன்றிய பாஜக அரசு அதனை சட்டமாக்கியுள்ளது. இந்த வக்ப் திருத்த சட்டத்தை கைவிடக்கோரி, தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும், ஒன்றிய அரசின் வக்ப் திருத்த சட்டத்திற்கு எதிராக தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் மற்றும் இஸ்லாமிய அமைப்புகள் உட்பட 70க்கும் மேற்பட்ட மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, சஞ்சய் குமார், கே.வி.விஸ்வநாதன் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

விசாரணை தொடங்கியதும், 'இந்த ரிட் மனுக்களை விசாரிப்பதா? அல்லது மனுக்களை ஐகோர்ட்டுக்கு அனுப்பி விசாரிக்க சொல்வதா? இந்த விவகாரத்தை வலியுறுத்தி முன்வைக்கப்பட உள்ள வாதங்கள் என்ன?' என இருதரப்பையும் கேட்டனர்.

இதைத்தொடர்ந்து மனுதாரர் தரப்பில் மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் வாதாடினார். அப்போது அவர், 'அரசியலமைப்பு சட்டத்தின் 26வது பிரிவில் மதம் சார்ந்த விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை அனைவருக்கும் பொதுவானது. மதச்சார்

பற்றது. ஆனால், வக்ப் சட்ட திருத்தம் வழிபாட்டு முறையை பறிக்கிறது.

வக்புக்கு சொத்தை எழுதிவைக்க விரும்பினால் 5 ஆண்டுகளாக முஸ்லிம் மதத்தை பின்பற்றியதற்கான ஆதாரத்தை வழங்க வேண்டும் என புதிய சட்ட திருத்தம் கூறுகிறது. பிறப்பால் முஸ்லிம் என்ற பட்சத்தில் அந்த ஆதாரத்தை ஏன் காட்ட வேண்டும்?. முஸ்லிம் மதத்தில் மரபு வாரி சுரிமை இறப்புக்கு பின்பே வருவதில் வக்ப் சட்ட திருத்தம் தலையிடுகிறது' என வாதிட்டார்.

இதைத்தொடர்ந்து மூத்த வழக்கறிஞர் ராஜீவ் தவன் ஆஜராகி, 'முஸ்லிம் மதத்தில் ஒருங்கிணைந்த அங்கமாக வக்ப் இருந்து வருகிறது. மத அடிப்படையிலான தானம் முக்கிய அம்சமாகும்' என வாதிட்டார்.

மனுதாரர் தரப்பு மற்றொரு மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி ஆஜராகி, 'வக்ப் சட்ட திருத்தம் நாடு முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்துவதால், இந்த ரிட் மனுக்களை ஐகோர்ட்டுக்கு மாற்றி விசாரிக்க உத்தரவிடக்கூடாது. மாறாக வக்ப் சட்ட திருத்தத்தை நடைமுறைப்படுத்த இடைக்கால தடை விதிக்க வேண்டும்' என வாதிட்டார்.

மற்றொரு மனுதாரர் தரப்பு மூத்த வழக்கறிஞர் ஹுஸேபா அகமது ஆஜராகி 'அனுபவ வக்ப் சொத்து என்பது முஸ்லிம் மதத்தில் நிலைபெற்ற வழக்கமாக இருப்பதால், அனுபவ சொத்துகளை கையகப்படுத்த அனுமதிக்க கூடாது' என வாதிட்டார்.

தி.மு.க. சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆஜராகி, 'பொது ஒழுங்கு, பொது சுகாதாரம் போன்றவை பாதிக்கப்படும்போது மட்டுமே இயற்றப்படும் கட்டுப்பாடுகளைக் கொண்ட சட்டங்களை வக்ப் சட்ட திருத்தம் கொண்டுள்ளது. இது மதம் சார்ந்த விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமையை பறிக்கிறது' என வாதிட்டார்.

அப்போது தலைமை நீதிபதி, '1925ம் ஆண்டுக்கு முந்தைய அனுபவ வக்ப் சொத்துகளின் நிலை என்னவாகும்?. ஆங்கிலேயர் காலத்துக்கு முன் பதிவுமுறை இல்லாத காலத்தில் 12, 13, 14, 15ம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட மசூதிகளுக்கு விற்பனை ஆவணத்தை கேட்டால் என்னவாகும்?. உதாரணமாக டெல்லி ஜும்மா மசூதி அனுபவ சொத்தாக கருதப்படுகிறது' என்று தெரிவித்தார்.

உடனே சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, 'பதிவு செய்யப்பட்டிருந்தால் அத்தகைய சொத்துகள் செல்லுபடியாகும். இத்தகைய சொத்துகளை பதிவு செய்ய யாரும் தடுக்கவில்லை. முஸ்லிம்களில் பெரும்பகுதியினர் வக்ப் சட்டத்தால் ஆளப்படுவதை விரும்பவில்லை' என்று தெரிவித்தார்.

இடைக்கால உத்தரவு!

இதற்கு நீதிபதிகள், 'அப்படியென்றால் இந்து அறநிலையத்துறைகளில் முஸ்லிம்கள் அங்கம் வகிக்கலாம் என கூற வருகிறீர்களா?. கூற வருவதை வெளிப்படையாக கூறுங்கள்' என தெரிவித்தனர்.

மேலும் நீதிபதிகள், வக்ப் சொத்துகள் குறித்து மாவட்ட கலெக்டர்கள் மேற்கொண்டு வரும் விசாரணை முடிவுகளை செயல்படுத்தக்கூடாது. வக்ப் வாரியங்களிலும், மத்திய வக்ப் கவுன்சிலிலும் அலுவல்வழி உறுப்பினர்கள் இருவரை தவிர அனைவரும் முஸ்லிம்களாக இருக்க வேண்டும் என்பன போன்ற இடைக்கால உத்தரவுகளை பிறப்பிக்க உத்தேசித்து உள்ளோம். இவை தொடர்பாக வாதங்களை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன் வைக்கும் வகையில் விசாரணை தள்ளி வைக்கப்படும்' என்றும் தெரிவித்திருந்தனர்.

இந்த மனுக்கள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா தலைமையிலான அமர்வு முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஒன்றிய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல், வக்ப் சட்டத்தின் சில பிரிவுகளுக்கு தடை விதிப்பது என்பது சில பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும், ஒரு வாரத்தில் பதிலளிக்க ஒன்றிய அரசு தயாராக உள்ளது என்றும் வாதிட்டார். இதையடுத்து, வக்ப் திருத்த சட்டத்தின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர்கள் வக்ப் சொத்துக்களை வகை மாற்றம் செய்ய இடைக்கால தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

வக்ப் சொத்துக்களை பயனாளிகள் தொடர்ந்தாலோ, வக்ப் என்று அறிவிக்கப்பட்ட சொத்துக்களையோ, வக்ப் அல்லாத சொத்து என வகை மாற்றம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய திருத்த சட்டத்தின்படி வக்ப் வாரியத்தில் இஸ்லாமியர்கள் அல்லாதோரை உறுப்பினர்களாக நியமிக்கக் கூடாது என்றும் உத்தரவிட்ட நீதிபதிகள், வக்ப் சொத்து மீது தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

மேலும், வக்ப் திருத்த சட்டத்திற்கு எதிரான மனுக்கள் மீது ஒன்றிய அரசு ஒரு வாரத்தில் பதில் அளிக்க உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை மே 5ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

இதற்கிடையே, டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மூத்த வழக்கறிஞர் வில்சன், வக்ப் திருத்த சட்டத்திற்கு இடைக்கால தடை விதித்த உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவு தி.மு.க.வுக்கு கிடைத்த மற்றுமொரு வெற்றி என்று கூறினார்.

வக்ப் திருத்தச் சட்டத்திற்கு இடைக்காலத் தடை!

உச்சநீதிமன்றத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!

சென்னை, ஏப். 19–

வஃப் திருத்தச் சட்டத்திற்கு இடைக்கால தடை விதித்த உச்சநீதிமன்றத்திற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

வக்ஃபு திருத்தச் சட்டம், 2025ஐ எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் தாக்கல் செய்த மனுவை மற்ற மனுக்களுடன் சேர்த்து விசாரித்ததற்கும், வக்ஃபு சொத்துகளைப் பாதுகாப்பதற்கும், வக்ஃபு வாரியங்கள் அல்லது கவுன்சில்களில் முஸ்லிம் அல்லாதவர்களை நியமிப்பதைத் தடுப்பதற்குமான இடைக்கால உத்தரவைப் பிறப்பித்ததற்காக மாண்பமை உச்ச நீதிமன்றத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முஸ்லிம் சமூகத்தின் அறக்கட்டளைகள் மற்றும் முக்கிய மத நடைமுறைகளின் நிர்வாகத்தில் தலையிடுவதன் மூலம், அவர்களைக் குறிவைத்து தாக்கும் ஒரே நோக்கத்துடன், இந்த தீய சட்டத் திருத்தம் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்டுள்ளது.

நாங்கள் சுட்டிக்காட்டியபடி, இந்த திருத்தச் சட்டத்தின் பல பிற்போக்குத்தனமான விதிகளை நீதித்துறையின் மறு ஆய்வு செய்து மட்டுப்படுத்தி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. நமது சிறுபான்மைச் சகோதரர்களுக்கு அரசியலமைப்பு அளித்துள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 160 மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் மற்றும் 25 ஊராட்சிகளுக்கு 77 மின்கல வாகனங்களை வழங்கினார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், கூடுதல் ஆட்சியர் டாக்டர் மோனிகா ராணா சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், துணை மேயர் நாகராஜன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

1072 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் ! – தேவகோட்டை

முப்பையூரில் முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன். மு.தென்னவன் சிறப்புரை! நாகனிரவி தலைமை!

சிவகங்கை, ஏப். 19 -

கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் நிகழ்ச்சி கடந்த மார்ச் மாதம் முதல் சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய ,நகர ,பேரூர் கழகங்களின்மூலமாக நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்று (19ஆம் தேதி சனிக்கிழமை) தேவகோட்டை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் முப்பையூரில் மாலை 5 மணி அளவில் தேவகோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் நாகனி ரவி தலைமையில் ஒன்றிய நிர்வாகிகள் எஸ். சின்னத்துரை, ஆர் .செந்தில் குமார் ஜெயராணி செல்வேந்திரன், சி. பாண்டி, கே. நம்பியார், ஆர் . ரவிச்சந்திரன், எஸ் . சாமிநாதன் , பி.கணேசன் ஆகியோர் முன்னிலையில் பிறந்த நாள்விழா பொதுக்கூட்டம் மற்றும் 1072 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழக்கு நிகழ்ச்சி நடைபெறுகிறது. முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ஆர்.எம். கென்னடி வரவேற்று பேசுகிறார். மக்கள் கவிஞர் அருநாகப்பன் தலைமையிலான இன்னிசை பாட்டு பட்டிமன்றத்தை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் துவக்கி வைத்து,1072நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை சிறப்புரை ஆற்றுகிறார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்எல்ஏ காரைக்குடி தொகுதி சட்டமன்ற பொறுப்பாளர் கே.முருகவேல் ,மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ மாநில மாணவரணி இணை செயலாளர் ராமகிருஷ்ணன் ஆகியோர் பேசுகிறார்கள்.

பொதுக்கூட்டத்தில் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். காரைக்குடி தொகுதி தகவல் தொழில்நுட்ப்அணி அமைப்பாளர் சிவா நன்றி கூறுகிறார் . பொதுக் கூட்ட விழா ஏற்பாடுகளை தேவகோட்டை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் நாகனி ரவி தலைமையில் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

தென்காசி வடக்கு மாவட்டம்

திருவல்லிபுத்தூர் தொகுதி பார்வையாளர் ப.ஆ.சரவணன் மறைவு!

இரா.ஆவுடையப்படன – மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. – ஈ.இராஜா எம்.எல்.ஏ. அஞ்சலி!

தென்காசி, ஏப். 19 -

தென்காசி வடக்கு மாவட்டம் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் மற்றும் திருவில்லிபுத்தூர் தொகுதி பார்வையாளர் ப.ஆ.சரவணன் (வயது 61) உடல்நலக் குறைவினால் நெல்லை காவேரி மருத்துவமனை சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று 17 .04.2025 ம் தேதி வியா ழக்கிழமை காலை 12 மணி அளவில் மறை வெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி சிவகிரி ஊரைச் சேர்ந்தவர் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் ப.ஆ. சரவணன்,(வயது 61) தற்போது நெல்லை பாலபாக்யா நகரில் வசித்து வருகிறார். அவர் உடல்நிலை குறைவு காரணமாக நெல்லை காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் 17.04.2025 வியாழக்கிழமை காலை 12 மணி அளவில் இயற்கை எய்தினார்.

மறைந்த ப.ஆ.சரவணன் கழக இளைஞர் அணி தொடங்கப்பட்ட காலத்தில் வாசுதேவநல்லூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளராக பொறுப்பேற்றார்.அதன் பின்னர் 1983 முதல் 1989 வரை பொதுக்குழு உறுப்பினராக பணியாற்றினார்.பின்னர் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ அவர்களுடன் 1995 முதல் 2015 வரை ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட ம.தி.மு.க.செயலாளராக இருந்து வந்தார்.

அதன் பின்னர் 2015 ல் கழகத்தில் இணைந்த அவருக்கு தலைமை தீர்மானக் குழு பொறுப்பு வழங்கப்பட்டது. கழகத்தில் இணைந்த போது தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முன்பு பொதுக்குழுவில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சரவணனை இளைஞர் அணி பொறுப்பு வழங்கப்பட்ட போது வேகமும்,விவேகமு டனும் செயல்பட்டார்கள் என்று சுட்டிக்காட்டி பாராட்டி பேசினார்கள்.

2015 முதல் தற்போது வரை தலைமை தீர்மான குழு பொறுப்பாளராக இருந்து வருகிறார்.

இப்படி கழகத்திற்காக உழைத்து வந்த கழகத் தலைவர் அவர்களால் பாராட்டபட்ட தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் ப.ஆ. சரவணன் நேற்று முன்தினம் 17.04.2025 ஆம் தேதி மறை வெய்தினார். மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி பார்வையாளராகவும் இருந்து வருகிறார்.இது பற்றிய தகவல் அறிந்ததும் மாவட்ட கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் பலர் சென்று அன்னாரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதிச் சடங்கு நேற்று 18,04.2025 வெள்ளிக்கிழமை காலை 12 மணி அளவில் பாலபாக்யா நகரில் அன்னாரது இல்லத்தில் வைத்து நடைபெற்றது.

இறுதிச் சடங்கில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல். ஏ., முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா, ராணி ஸ்ரீகுமார் எம்.பி., ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர் பாட்ஷா முத்து ராமலிங்கம் எம்.எல்.ஏ.மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜோயல்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மேயர் ராமகிருஷ்ணன்,மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன்,தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன்,தச்சைப் பகுதி செயலாளர்

சுப்பிரமணியன் ஆகியோர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ப.ஆ.சரவணன் அவர்களுக்கு பழனியம்மாள் என்ற மனைவியும், பிரியதர்ஷினி என்ற மகளும்,ஆதிசேஷன் என்ற மகனும் உள்ளனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் நாகர்கோவில், புன்னைநகர் சி.எம்.எஸ். மாணவர்கள் இல்லத்தில் மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட வர்த்தகர் அணி துணை தலைவர் ரா.குமார் தலைமையில் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் சி.என்.செல்வன் முன்னிலையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் மதிய உணவு, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் ஜெ.ஹெலன் டேவிட்சன், வழக்கறிஞர் ப.ஆனந்த், த.ஜீவா, என்.பி.துரை, மு.சேக்மீரான், செ. சரவணன் உட்பட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக தி.மு.க வாக்குச்சாவடி குழுவில் உள்ள

இளைஞர் அணி அமைப்பாளர்களுக்கான சமூகவலைதள பயிற்சிக் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி. கீதாஜீவன் அறிவிப்பு!

தூத்துக்குடி, ஏப். 19 -

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 3 சட்டமன்றத் தொகுதிகளிலும் தனித் தனியாக வாக்குச்சாவடி குழுவில் உள்ள இளைஞர் அணி அமைப்பாளர்களுக்கான சமூகவலைதள பயிற்சிக் கூட்டங்கள் நடைபெற உள்ளதாக மாவட்ட தி.மு.க செயலாளரும் அமைச்சருமான திருமதி. பி.கீதாஜீவன் அவர்கள் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது,

தூத்துக்குடி வடக்கு மாவட்டம் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் வாக்குச்சாவடி வாரியாக நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணி அமைப்பாளர்களுக்கான சமூக வலைதள பயிற்சிக் கூட்டம் ஏப்ரல் 19ஆம் தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தூத்துக்குடி எட்டயபுரம் சாலையில் உள்ள கலைஞர் அரங்கில் வைத்து நடைபெறுகிறது.

அதே நாளில் மாலை 4 மணிக்கு கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி குழுவில் உள்ள இளைஞரணி அமைப்பாளர்களுக்கான சமூகவலைதளப் பயிற்சிக் கூட்டம் கோவில்பட்டி சௌபாக்கியா மஹாலில் நடைபெற உள்ளது. அதைத் தொடர்ந்து ஏப்ரல் 26 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி குழுவில் உள்ள இளைஞர் அணி அமைப்பாளர்களுக்கான சமூகவலைதள பயிற்சிக்கூட்டம்விளாத்திகுளம் G.V.மஹாலில் வைத்து நடைபெறுகிறது.

சட்டமன்றத் தொகுதி வாரியாக நடைபெற உள்ள இந்த சமூக வலைதள பயிற்சிக்கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி குழுவில் உள்ள இளைஞரணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்.

மேலும் தி.மு.க தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் மற்றும் தி.மு.க இளைஞரணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பின்படி தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதி வாரியாக நடைபெற உள்ள இளைஞரணி சமூக வலைதள பயிற்சிக் கூட்டங்களில் வாக்குச்சாவடி குழுவில் உள்ள இளைஞரணி அமைப்பாளர்கள் அனைவரும் கலந்துகொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் செய்து தருவதுடன் தாங்களும் அந்த கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.